# ஆதித்ய ஹ்ருதயம்

## Adhithya Hrudayam

தமிழ் கவிதை வடிவில்...

பி. ஸ்ரீதேவிபிரசாத்
psdprasad.music@gmail.com

PSD PRASAD

ஜனவரி 2022



1)

Tato Yuddha-Parishraantam Samare Cintayaa Sthitam |
Raavannam Ca-Agrato Drssttvaa Yuddhaaya Samupasthitam ||1||

போரினில் களைப்பினாலே...
சோர்வினில் ஸ்ரீ ராமனே !
நேரிலே ராவணன் நின்றான்
போரினைத் தொடர் செய்யவே!

2)

Daivataish-Ca Sam-Aagamya Drassttum-Abhyaagato Rannam |
Upaagamya-Abraviid-Raamam-Agastyo Bhagavaan-Rssih ||2||

தேவர்கள் சூழ்ந்திட அங்கே
போரினைக் காணவே வந்த...
மாமுனி அகத்தியர் அவரும்
ராமனின் அருகிலுரைத்தார்

3)

Raama Raama Mahaa-Baaho Shrnnu Guhyam Sanaatanam |
Yena Sarvaan-Ariin-Vatsa Samare Vijayissyasi ||3||

ராமா ! ராமா ! மகாவீரா !
கேளாய் ! சொல்வேன் ரகசியம் !
போரினில் பகையைவென்று
சேர்ந்திடும் வெற்றி நிச்சயம் !

4)

Aaditya-Hrdayam Punnyam Sarva-Shatru-Vinaashanam |
Jaya-[A]avaham Japen-Nityam-Akssayyam Paramam Shivam ||4||

ஆதித்ய இதயம் என்னும்
பகையழிக்கும் மந்திரம் !
ஓதினால் இதைதினந்தோறும்
ஒப்பிலா வெற்றியைத் தரும் !

5)

Sarva-Manggala-Maanggalyam Sarva-Paapa-Prannaashanam |
Cintaa-Shoka-Prashamanam-Aayur-Vardhanam-Uttamam ||5||

மாறாத மங்களம் தருவான் !
தீராப் பாவம் தீர்த்திடுவான் !
சோகம் தீர்க்கும் சூர்யதேவன்..
ஆயுளையும் வளர்த்திடுவான் !

6)

Rashmimantam Samudyantam Deva-Asura-Namaskrtam |
Puujayasva Vivasvantam Bhaaskaram Bhuvane[a-Ii]shvaram ||6||

தேவாசுரர் பணிந்தேற்றும்...
தேவன், சமத்(து)வ நாயகன் !
பேரொளியாய் கிரணம் கொண்டு
பார் ஆளும் பாஸ்கரன் !

PSDPRASAD

7)

Sarva-Deva-[A]atmako Hy[i]-Essah Tejasvii Rashmi-Bhaavanah |
Essa Deva-Asura-Gannaan Lokaan Paati Gabhastibhih ||7||

தேவர்கள் ஆற்றல்தன்னை
காட்டிடும் தேஜேஸ்வரன் !
தேவாசுரர் குலம்தன்னை
காத்திடும் ஒளிக்கீற்றவன் !

8)

Essa Brahmaa Ca Vissnnush-Ca Shivah Skandah Prajaapatih |
Maahendro Dhanadah Kaalo Yamas-Somo Hy[i]-Apaam Patih ||8||

ஈசன், விஷ்ணு, ப்ரம்மா, கந்தன்
ப்ரஜாபதி குருவும் அவன் !
காலன், இந்த்ரன், வருணதேவன்
சோமன், தன நாயகன் !

9)

Pitaro Vasavas-Saadhyaah Hy[i]-Ashvinau Maruto Manuh |
Vaayur-Vahnih Prajaa-Praannaa Rtu-Kartaa Prabhaa-Karah ||9|||

வசு, சாத்யா, மனுக்கெல்லாம்
அவனே ஆதி ஆனவன் !
வீசும் காற்றும் தீயும் அவனே !
பருவங்கள் செய்கின்றவன் !

10)

Aadityah Savitaa Suuryah Khagah Puussaa Gabhastimaan |
Suvarnna-Sadrsho Bhaanur-Hirannya-Reto Divaakarah ||10||

ஆற்றலை அருளும் கிரணன்
அதிதி மைந்தன் முதற் கோளன் !
கீற்றென பொன்னொளி வீசி
காலைப் பொழுதைத் தருகின்றவன் !

PSDPRASAD

11)

Harid-Ashvas-Sahasra-Arcis-Sapta-Saptir-Mariicimaan |
Timiro[a-U]nmathanash-Shambhus-Tvassttaa Maartaanndda Amshumaan ||11||

பரி ஏழும் பரிதியின் ஒளியாய்
விரியும்பல செங்கிரணமாய் !
புற, அக இருளை நீக்கும்
பறவையாம் ஒளியானவன் !

12)

Hirannya-Garbhash-Shishiras-Tapano Bhaaskaro Ravih |
Agni-Garbho[a-A]diteh Putrah Shangkhash-Shishira-Naashanah ||12||

குளிரைக் கருவில் எரியச் செய்து
ஒளியாய் விண்ணில் அளிப்பவன்!
அதிதி மைந்தன் ஒலிக்கும் சங்கு
அதிலே விழிப்பளிப்பவன் !

13)

Vyoma-Naathas-Tamo-Bhedii Rg-Yajus-Saama-Paaragah |
Ghana-Vrssttir-Apaam Mitro Vindhya-Viithii-Plavanggamah ||13||

இருளை மறைக்கும் வான நாதன்
மறை மூன்றின் சாதகன் !
மலை தாண்டி விரையும் வேகன்!
மழை தருவோன், நீர் சிநேகிதன் !

14)

Aatapii Mannddalii Mrtyuh Pinggalas-Sarva-Taapanah |
Kavir-Vishvo Mahaa-Tejaah Raktas-Sarva-Bhavo[a-U]dbhavah ||14||

ஒளிவட்ட செந்நிறத்தோன்
அதனுள் யாவும் எரிப்பவன் !
கவியானோன், சகத்திற்கெல்லாம்
விழிப்பினைத் தருகின்றவன் !

PSDPRASAD

15)

Nakssatra-Graha-Taaraannaam-Adhipo Vishva-Bhaavanah |
Tejasaam-Api Tejasvii Dvaadasha-[A]atman-Namo[ah-A]stu Te ||15||

நட்சத்திரம், கோள்களுக் கெல்லாம்
அவனே தலை நாயகன் !
உச்சஆற்றல் மிகுந் தொளிர்வோன் !
பன்னிரு ஆத்மனானவன் !

16)

Namah Puurvaaya Giraye Pashcimaaya-Adraye Namah |
Jyotirgannaanaam Pataye Dina-Adhipataye Namah ||16||

கிழக்கு மலையில் எழுபவா போற்றி !
மேற்கிலே மறைபவா போற்றி !
நாளின் நாயகா போற்றி !
கோளின் கோவே போற்றி !

17)

Jayaaya Jaya-Bhadraaya Hary-Ashvaaya Namo Namah |
Namo Namas-Sahasra-Amsho Aadityaaya Namo Namah ||17||

ஆயிரம் கிரணோன் போற்றி !
ஆதித்ய தேவனே போற்றி !
செந்நிற மங்கலன் போற்றி !
வென்றிடும் தேவனே போற்றி !

18)

Nama Ugraaya Viiraaya Saaranggaaya Namo Namah |
Namah Padma-Prabodhaaya Maartannddaaya Namo Namah ||18||

வீரியனே ! உக்ரனே ! போற்றி !
வண்ண மய தேகனே போற்றி !
மலர்ந்திடச் செய்பவா போற்றி !
மார்த்தாண்டனே ! போற்றி ! போற்றி !

PSD PRASAD

19)

Brahme[a-Ii]shaana-Acyute[a-Ii]shaaya Suurya-[A]aditya-Varcase |
Bhaasvate Sarva-Bhakssaaya Raudraaya Vapusse Namah ||19||

மும்மூர்த்தியரின் தேவா !
மிளிர்கின்ற ஆதித்யனே !
ரௌத்ரமாய் உருவம் கொண்டு
ஒளிர்பவா போற்றி ! போற்றி !

20)

Tamo-Ghnaaya Hima-Ghnaaya Shatru-Ghnaaya-Amita-Atmane |
Krtaghna-Ghnaaya Devaaya Jyotissaam Pataye Namah ||20||

அஞ்ஞானம், பகையை எல்லாம்
அழித்திடும் அருளே போற்றி !
செய்நன்றி கொன்றார் அழிக்கும்
தெய்வீக ஒளியே போற்றி !

21)

Tapta-Caamiikara-[A]abhaaya Vahnaye Vishva-Karmanne |
Namas-Tamo-[A]bhinighnaaya Rucaye Loka-Saakssinne ||21||

செயல்களுக் கெல்லாம் ஆற்றலாகும்
தங்கத் தீபோல் ஆனவன் !
இருளை நீக்கும் அழகு ஒளியோன்
உலகின் சாட்சியானவன் !

22)

Naashayaty[i]-Essa Vai Bhuutam Tad-Eva Srjati Prabhuh |
Paayaty[i]-Essa Tapaty[i]-Essa Varssaty[i]-Essa Gabhastibhih ||22||

ஆக்குவோன், அழிப்போன் அவனே !
அகிலத்து உயிர்களையெலாம் !
நீரினை ஒளியால் உண்டு
மாரியாய் பொழிகின்றவன் !

PSD PRASAD

23)

Esha Suptessu Jaagarti Bhuutessu Parinisstthitah |
Esha Cai[a-E]va-Agnihotram Ca Phalam Cai[a-E]va-Agnihotrinnaam ||23||

உயிர்கள் எலாம் உறங்கும்போதும்
உறங்காது விழித்திருப்பவன் !
அக்னிஹோத்ரர் அவர் நாடும்
அரும்பலன் தானானவன் !

24)

Vedaash-Ca Kratavash-Cai[a-E]va Kratuunaam Phalam-Eva Ca |
Yaani Krtyaani Lokessu Sarva Essa Ravih Prabhuh ||24||

வேதநெறிகள் வடிவும் ஆகி
அதன்பலனும் என்றானவன் !
யாதொரு செயற்கும் புவியில்
அவனே ஆற்றலாகிறான் !

25)

Enam-Aapatsu Krcchressu Kaantaaressu Bhayessu Ca |
Kiirtayan Purussah Kashcin-Na-Avasiidati Raaghava ||25||

அச்சம், துன்பம் வரும்போதும்
பேரிடர்கள் வரும்போதிலும்
நிச்சயம் கைவிடமாட்டான்
தன்பதம் துதிப்போர்களை !

26)

Puujayasvai[a-E]nam-Ekaagro Deva-Devam Jagat-Patim |
Etat-Tri-Gunnitam Japtvaa Yuddhessu Vijayissyasi ||26||

"ஆதித்ய இதயம்" இதனை
மும்முறை ஒருநாளிலே
ஓதினால் ஒருமனதாக...
வெற்றிகள் வசமாகுமே !

27)

Asmin Kssanne Mahaa-Baaho Raavannam Tvam Vadhissyasi |
Evam-Uktvaa Tato-[A]gastyo Jagaama Ca Yatha[a-A]agatam ||27||

"வென்றிடுவாய் விரைவில்நீ
ராவணனை ஸ்ரீ ராமனே !"
என்றுரைத்து அகத்தியரும்
வந்தவழி திரும்பினார் !

28)

Etac-Chrutvaa Mahaa-Tejaah Nasstta-Shoko-[A]bhavat-Tadaa |
Dhaarayaamaasa Supriito Raaghavah Prayata-[A]atmavaan ||28||

சூரியன் ஸ்தோத்திரம் கேட்டு
வீர்யமுற்றான் ஸ்ரீராமனே !
கருணை உளம் கொண்டவன் தன்
கவலைகளை கலைந்திட்டான் !

29)

Aadityam Prekssya Japtvaa Tu Param Harssam-Avaaptavaan |
Trir-Aacamya Shucir-Bhuutvaa Dhanur-Aadaaya Viiryavaan ||29||

கதிரவன் துதியைப் பாடி
மகிழ்ந்தான் ஸ்ரீராமனே !
மும்முறை நீரைப் பருகி
தெம்புடன் வில்லேந்தினான் !

30)

Raavannam Prekssya Hrsstta-[A]atmaa Yuddhaaya Sam-Upaagamat |
Sarva-Yatnena Mahataa Vadhe Tasya Dhrto-[A]bhavat ||30||

போர்செய ராவணன் எதிரில்
வருவதைக் கண்ணுற்றவன்...
வீரமாய் நிமிர்ந்தே நின்றான்
ராவணன் வதம்செய்யவே !

DSD PRASAD

31)

Atha Ravir-Avadan-Niriikssya Raamam Mudita-Manaah Paramam Prahrssyamaannah |
Nishi-Cara-Pati-Samkssayam Viditvaa Sura-Ganna-Madhyagato Vacas-Tvare[a-I]ti ||31||

ஸ்ரீராமன் முகம்கண்டு
பகலவன் உளம் குளிரவே…
ராவணன் முடிவைக் காணும்
நேரம் வந்ததென்றான்…

PSD PRASAD